## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## இலங்கைச் சுங்கத் திணைக்களம்

## சுங்கப் பரிசோதகர் பதவியில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2026

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் சுங்க பரிசோதகர் பதவியில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த பரீட்சைக்குத் தகுதிபெற்றுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” இன் கீழ் உள்ள “Online Applications (Recruitments/E.B. Exams)” ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை (Online) முறைமையில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதானது 2026 செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாகின்ற அதேவேளையில் 2026, ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதியன்று பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்கசேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தமது தனியாள் கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டிய அதேவேளையில், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியையும்சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிப்பதனை, இறுதித் திகதி வரையில் கால தாமதப்படுத்துவதனால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களையும் விண்ணப்பதாரர்களே ஏற்றல் வேண்டும்.

இந்தப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நாடு பூராகவும் அமைந்துள்ள பின்வரும் பிரதான நகரங்களில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது எதிர்

காலத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும். இப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்ததாகும்.

பரீட்சை நடைபெறவிருக்கும் நகரங்கள் மற்றும் அது குறித்த நகர குறியீட்டு இலக்கங்கள் வருமாறு :

| மாகாணம் | நகரம் | நகர இல. |
|---|---|---|
| மேல் | கொழும்பு<br>கம்பஹா<br>களுத்துறை | 01<br>02<br>03 |
| மத்திய | கண்டி<br>மாத்தளை<br>நுவரெலியா | 04<br>05<br>06 |
| தென் | காலி<br>மாத்தறை<br>ஹம்பாந்தோட்டை | 07<br>08<br>09 |
| வடக்கு | யாழ்ப்பாணம்<br>மன்னார்<br>வவுனியா<br>முல்லைத்தீவு<br>கிளிநொச்சி | 10<br>11<br>12<br>13<br>14 |
| கிழக்கு | மட்டக்களப்பு<br>அம்பாறை<br>திருகோணமலை | 15<br>16<br>17 |
| வடமேல் | குருநாகல்<br>புத்தளம் | 18<br>19 |
| வடமத்தி | அனுராதபுரம்<br>பொலன்நறுவை | 20<br>21 |
| ஊவா | பதுளை<br>மொனராகலை | 22<br>23 |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி<br>கேகாலை | 24<br>25 |

ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் விண்ணப்பதாரர்களின் இரண்டாம் விருப்பத்தேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள நகரத்தில் அல்லது அதனை அண்மித்துள்ள வேறொரு நகரமொன்றுக்கு அல்லது பரீட்சை நிலையமொன்றிற்கு குறித்த பரீட்சார்த்திகள் மாற்றப்படலாம். உத்தேச நகரங்கள் அனைத்திலும் அல்லது பெரும்பாலான அல்லது பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையில் பரீட்சார்த்திகள் விண்ணப் பித்திருக்காவிடின், குறித்த பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேற்கொள்வார். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கப்படுகின்ற நகரமானது விண்ணப்பதாரர்களின் தேவைக்கேற்ப பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **தகைமைகள்:**

I. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும்,

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ஆ) சிறந்த ஒழுக்கப் பண்புகளைப் பெற்றிருத்தல்;

(இ) விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதி யன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல், இதற் கான தகுந்த சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல். (அதற்கமைய, வயது தொடர்பான தகைமை பூர்த்தி செய்யப்படுவது விண்ணப்பதாரி 2008.10.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் 2002.10.12 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்திருத்தல் வேண்டும்)

**குறிப்பு 02** : ஏதேனும் சமயப் பிரிவொன்றில் மதகுரு அந்தஸ்திலிலுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி யளிக்கப்படமாட்டாது.

II. **உடற் தகைமைகள்**: ஆண் விண்ணப்பதாரர்கள் 5 அடி 5 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தினைக் கொண்டிருக்க வேண்டியதுடன், மார்பு விரிவடைந்த நிலையில் 33 அங்குலத்திற்கு குறையாத சுற்றள வினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

பெண் விண்ணப்பதாரர்கள் 5 அடி 3 அங்குலத்திற்கு குறையாத உயரத்தினைப் பெற்றிருத்தல்.

III. **கல்வித் தகைமை:** விண்ணப்பதார்கள் ஒவ்வொரு வரும் பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பிராதன மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் பிரதான பாடங்களான சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் போன்ற

பாடங்கள் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியும் ஆங்கிலம் மொழியில் ஆகக் குறைந்தது சாதாரண சித்தியும் அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் 06 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

03. சேவை நிபந்தனைகள்:-

(I) இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத் திட்டம் வருமாறு :

பொது நிர்வாக சுற்றறிக்கை இல.10/2025 இற்கு அமைய சம்பள அளவுத் திட்டமானது, RS – 1 என்ற சம்பளத் தொகுதியில் ரூபா 49,550- 7 X 540 – 27 X 670 – 71,420 ஆகும்.

(II) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துக்குரியது என்பதுடன் எதிர்காலத்தில் ஓய்வூதிய திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுடன் இணங்குதலும் வேண்டும்.

(III) தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலப் பகுதிக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(IV) நியமனத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல் நிலை தகுதியினைக் கொண்டுள்ளனரா என்பதைப் பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.

(V) நியமனத்தர்கள் இரவிலும் பகலிலும் சேவையாற்றுதற்கு தயாராக இருத்தல் வேண்டும் என்பதோடு, அவர்கள் நாட்டின் எப் பாகத்திலும் கடமையாற்றுவதற்கும் கடப்பட்டுள்ளனர்.

(VI) நியமனத்தர்கள் அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I இன் (IIஅ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

04. **பரீட்சைக் கட்டமைப்பு** - ஆட்சேர்ப்புச்செய்வதற்கான பரீட்சையானது 03 வினாப் பத்திரங்களைக் கொண்டிருக்கும். அதன் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (01) | பொது உளச்சார்பு (01 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| (02) | கணிதம் (01 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| (03) | ஆங்கில மொழி (1½ மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| | மொத்தம் | 300 புள்ளிகள் |

**பொது உளச்சார்பு வினாத்தாள் -** இவ் வினாத்தாளானது விண்ணப்பதாரர்களது மொழித் தேர்ச்சி மற்றும் தர்க்க ரீதியான அறிவினை அளவிடும் வகையிலான பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய விடைகளுக்கான வினாக்கள் என்பனவற்றை உள்ளடக்கி 50 வினாக்களை உள்ளடக்கி இருக்கும். பரீட்சாத்திகள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**கணித வினாத்தாள் -** விண்ணப்பதாரர்களது கணித அறிவினை மட்டிடுவதற்காக தயாரிக்கப்பட்ட வினாக்களை கொண்டிருக்கும். பரீட்சாத்திகள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**ஆங்கில மொழி வினாத்தாள் -** விண்ணப்பதாரர்களது ஆங்கில மொழி வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பனவற்றை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கும்.

**குறிப்பு 03:** இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 02 (iii) இன் பிரகாரம், தகுதிபெறுகின்ற தாம் பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலேயே (அதாவது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில்) விண்ணப்பதாரர் தமது பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஆயினும், தகைமை பரீட்சைக்கு ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் தோற்றி சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர் ஒரு வருக்கு அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்விகற்றுள்ள விண்ணப்பதார் ஒருவர் தாம் விரும்பினால் இப்பரீட்சைக்கு சிங்கள மொழியில் தோற்றலாம். பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கின்ற மொழியை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரர் அனுமதிக்கப்படமாட்டார்.

(i) தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழை என்பனவற்றிற்கும் புள்ளிகள் குறைக்கப் படும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெறுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என கருதுதல் ஆகாது. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். அந்த சட்டதிட்டங்கள் மீறப்படும்பட்சத்தில் குறித்த பரீட்சாத்தி பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உள்ளாகலாம்.

(iii) **மதிப்பிடுகை** – பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும்

ஆகக் குறைந்தது 60% புள்ளிகளைப் பெறல் வேண்டும். அவ்வாறு புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் மூன்று பாடத்திலும் பெற்றுள்ள புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய, தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையினை விடவும் இரண்டு மடங்கிலான விண்ணப்பதாரர்களின் பெயர்களை உள்ளடக்கி பரீட்சை சுட்டிலக்க ஒழுங்கு வரிசைக்கு அல்லது அகராதி ஒழுங்குவரிசைக்கு தயாரிக்கப்பட்ட ஆவணமொன்றினை இலங்கை பரீட்சைகள் திணைக்களமானது இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும். அந்த ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையொன்றிற்காக அழைக்கப்படுவர். கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்படுகின்ற அதேவேளையில், விண்ணப்பதாரரின் விளையாட்டு திறமைகளுக்காக 10 புள்ளிகள் வழங்கப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பரீட்சைகளில் பெறப்பட்ட புள்ளிகளும் கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளும் மாத்திரமே கருத்தில் கொள்ளப்படுகின்ற அதேவேளையில், கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்கான விபரமான புள்ளி நடைமுறையை அனுமதிப்பதானது நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

05. **தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறை** - எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சை என்பனவற்றில் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், நிதி, திட்டமிடல் மற்றும்பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கு தெரிவுசெய்யப்படுவர். நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 10% பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கப்படும்.

(i) **பரீட்சைப் பெறுபேற்றினை வெளியிடல்** - எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களது கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சைப் புள்ளிகள் என்பனவற்றை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர், எழுத்துப் பரீட்சைப் புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகள் என்பனவற்றின் மொத்தப் புள்ளிகளை கூட்டி, இறுதி முன்னுரிமைப் பட்டியலினை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தயாரித்து சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படும். முன்னுரிமைப் பட்டியல் அனுப்பிவைக்கப்பட்வுடன், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமானதொரு திகதியினைக் குறிப்பிட்டு அனுப்பியதன் பின்னர் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்பட்ட புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றினை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீசாத்திகளுக்கும் அனுப்புவதற்கு அல்லது www.results.examinations.gov.lk எனும் இணையதளம் மூலம் வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

**குறிப்பு 04 :** சுங்கத் திணைக்களத்தின் கடமைகளின் தன்மைக்கு அமைய, பெண் அலுவலர்களும் சுழற்சி முறைப்படி இரவு நேரப் பணிகளில் ஈடுபட வேண்டிவரலாம்.

06. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் அப்பரீட்சைக்கான சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருப்பது கட்டாயமானதாகும்.

07. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) நிகழ்நிலை (Online) மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை வழியாக அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் செல்லுபடியான விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என அல்லது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என வலையமைப் பினை அணுகப் பயன்படுத்தப்படும் செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல்(E-mail) மூலம் உரிய முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை (Online) வழியான விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது வழிகாட்டுதல்களை (Common Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்கையில் இந்த வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றவும். பூரணமாகாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையில்/ அரசாங்க கூட்டுத் தாபனத்தில்/ நியதி சட்டமுறை சபைகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் நிறுவனத் தலைவரின் உடன்பாட்டை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய அதேவேலையில், எழுத்து பரீட்சையில் சித்தியடைந்து கட்டமைப்பு

முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவரை தற்போது வைக்கின்ற சேவையிலிருந்து/ பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதாக நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றை நேர்முகப் பரீட்சை குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துகையில் நிகழ்நிலையில் வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் கீழ் மாத்திரம் கொடுப்பனவினை மேற்கொள்ளல் வேண்டும்.

(i) ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

(ii) நிகழ்நிலையில் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய பற்று அட்டை (Debit Card with Online Payment Facility)

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை மூலம்/Flex செயலி மூலம் (Online Banking Method/ Flex App of Bank of Ceylon)

(iv) ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Slip Payment Bank of Ceylon)

குறிப்பு 05 : மேற்குறித்த முறையின் மூலம் கொடுப்பனவு செய்வது எவ்வாறு என்பது குறித்த வழிகாட்டுதல்கள் இணையதளத்தில் பரீட்சைகள் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(iii) கட்டணம் கிடைக்கப்பெற்றது என குறுஞ்செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தினை முழுமையாக செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தைக் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தியுள்ள விண்ணப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்படியான கட்டண முறையின் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களுக்கு பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது. மேற்குறித்த முறையின் மூலம் கொடுப்பனவு செய்வது எவ்வாறு என்பது குறித்த வழிகாட்டுதல்கள் இணையதளத்தில் பரீட்சைகள் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(iv) பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிப்புச் செய்யப்படவோ அல்லது அதற்குப் பதிலாக வேறொரு பரீட்சைக்கு மாற்றீடு செய்யப் படவோ மாட்டாது.

(v) பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலுமுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் விண்ணப்பதாரரினால் சான்றுறுதியளிக்கப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரரொருவர், தமது கையொப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினாலும், ஏனைய விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபர், பிரதேச கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமான ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி, அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலர், பௌத்த விகாரையொன்றின் பிரதம குரு அல்லது உயர்பீட மதக் குரு அல்லது ஏதேனுமொரு சமய வழிபாட்டுத் தளமொன்றிற்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்ளுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க பதவியொன்றினை வகிக்கின்ற அலுவலர் ஒருவரினாலோ சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு 06 : அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு பரீட்சாத்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சை ஆரம்பித்த முதல் நாளிலேயே பரீட்சாத்திகள் தமது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை மாத்திரம் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். பரீட்சாத்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கான பூரண தகுதியினைப் பெற்றுள்ளார் எனக் கருத்திற்கொள்ளக் கூடாது.

08. **பரீட்சைக்கான அனுமதி அட்டை :** வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள நபர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் நிகழ்நிலையில் மாத்திரம் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது குறித்து இணையத்தள அறிவித்தலொன்றின் மூலம்/ விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். தமது அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் இருப்பின், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும்

பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி, என்பனவற்றை சரியாகக் குறிப்பிடப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை இணையத் தள அறிவித்தலில் குறிப்பிட்டப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைத் திணைக்களத்தினால் வேண்டப்பட்ட தகவலொன்றினை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதியையும் தம் வசம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதி அட்டைகளை பரிசீலனைசெய்து, ஏதேனும் திருத்தங்கள் இருக்குமாயின் நேர காலத்துடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு 07 : பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் பெற்றுள்ளார் என்பதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு சான்றாக அதனைக் கருத்திற்கொள்ளலாகாது.

09. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்** – பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தமது ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும்.

(அ) தேசிய அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு;

(இ) செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, விண்ணப்பதாரர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத்தக்க வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்து இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணிய வில்லை என்பதை உறுதிப்படுத்தத்தக்க வகையில் இரு காதுகளையும் மறைக்காதவண்ணம் பரீட்சை நிலையத்தினுள் நுழைய வேண்டும். தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து நிலையத்தை விட்டு வெளிசெல்லும் வரையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்து இருத்தல் வேண்டும்.

10. **தகைமையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்**

(i) விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு, தேவையான விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தேவையான தகவல்களைக் கொண்டு பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் ஆவண ஆதாரங்களை சமர்ப்பித்து தமது தகுதியை நிரூபிக்க வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பொறுப்புவாய்ந்த ஆளெருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

குறிப்பு 08 : குறித்த குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், வதிவிட பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க பதவியொன்றில் நிரந்தர பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலர் அல்லது பொதுவாக நன்கு பிரபல்யமான, நேரடியாக தகவல்களைக் குறிப்பிடப்பட்டு பெற்றுக்கொள்ளமுடியுமான போன்றவர்களில் எவரிடமிருந்தும் இச்சான்றிதழினைப் பெறலாம். சான்றிதழினை வழங்கும் நபரது பதவிப் பெயர், பெயர், முகவரி என்பன அதில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றினை வகிக்கும் பரீட்சார்த்திகள் குணநல சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்கு அவசியப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதிவு செய்யப்படாத பரீட்சாத்திகள்தொடர்பில்) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றி விசேட சான்றிழ்

குறிப்பு 09 :

(i) பாடசாலை பாவனைக்காக அல்லது கல்வித் தேவைகளுக்காக வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட பிரதி என்பன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ii) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக சத்தியக் கடதாசி அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சார்த்தி சாதாரணமாக

பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களி லிருந்து பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம் மற்றும் 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரை/ பெயர்களைத் திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(iv) கல்வித் தகைமைகள் பற்றிய மூலச் சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றி தழ்கள் வழங்கப்படாதவிடத்து அதனோடு தொடர்புபற்ற ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள்.

(v) வலய/மாவட்ட/தேசிய மட்ட விளையாட்டு போட்டிகளில் திறமை தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆவணச் சான்றிதழ்.

(vi) விண்ணபப்ப் படிவத்தினை சமர்ப்பிக்கையில் அதற்குத்தேவையானசகலஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். தேவைப்படின் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றை சமர்ப்பிப்பதற்குத் தாமதிக்கின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத் திற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

11. தவறான தகவல்களை சமர்ப்பித்தல் – இப்பரீட்சைக்கான ஒழுங்கு விதிகளின் பிரகாரம் எவரேனும் பரீட்சார்த்தி யொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் என தெரியவருமாயின், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் குறித்த பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒரு வரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே உண்மையை மறைத்து போலியான விபரங்களை வழங்கியுள்ளார் எனக் கண்டுபிடிக்கப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப் பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பினை இழந்தவர் என நிரூபிக்கப்படின், அவர் உடனடியாக சேவையிலிருந்து நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கிச்செல்லாத விண்ணப்பதாரர்களின் விண் ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத வேரேதும் விடயங்கள் இருக்குமாயின் அது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிவின்படி தீர்மானிக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் ஏதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலே மேலோங்கிக் காணப்படும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

09-99/1

---

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## இலங்கை சுங்கத் திணைக்களம்

## சுங்க பரிசோதகர் தரம் II பதவிக்கு தரமுயர்த்துவதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

சுங்கப் பரிசோதகர் தரம் II பதவியில் தற்போதுள்ள வெற்றிடங்களில் 50% இனை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள, சுங்க காவலர் தரம் II பதவியிலுள்ள அலுவலர்களிடமிருந்து நிகழ்நிலையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள் :**

1.1 **தொழிற் தகைமைகள்:**

i. சுங்க காவலர் தரம் II பதவியிலுள்ள அலு வலராக இருத்தல்.

ii. உடன்முன்னரான 05 வருட செயலூக்க மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினைக் கொண்டிருத்தல் மற்றும் அக் காலப்பகுதியில் அனைத்து சம்பள ஏற்றங் களையும் உழைத்திருத்தல்.

iii. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப் பீட்டுத் திட்டத்திற்கமைய, பதவியுயர்வுத் திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருடங் களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேல் செயலாற்றுகையினை வெளிப் படுத்தியிருத்தல்.

iv. சுங்க காவலர் தரம் II பதவியோடு சம்பந்தப் பட்ட வினைத்திறன் காண் தடைப் பரீட்சை களில் சித்தியடைந்திருத்தல்.

1.2 **அனுபவம் :**

சுங்க காவலர் தரம் II அலுவலராக ஆகக் குறைந்தது குறித்த தரத்தில் 03 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்திருத்தல்.

**குறிப்பு:**

2026.12.31 ஆம் திகதி வரையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் வரையறுக்கப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்க்கப்படுவர்.

i. சுங்க காவலர் தரம் III பதவியில் குறைந்தது எட்டு (08) வருடங்கள் செயலூக்கமிக்கதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

ii. நியமனம் நிரந்தமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு உட்படாதிருத்தல்.

iv. எட்டு (08) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கமைய, எட்டு (08) வருட திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையினைக் கொண்டிருத்தல்.

v. தொடர்புபற்ற வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

vi. உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

1.3 **ஏனையவை:**

i. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் குறித்த காலப் பகுதியினுள் ஏதும் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு உட்படாதிருத்தல்.

ii. பதவிக்கு ஆட்சேர்ப்பதுடன் சம்பந்தப்பட்ட, மேலே 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் தினமாகிய 2026.10.12 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்ற பிரிவின் கீழுள்ள “Online Application – (Recruitment/E.B. Exams)” இல் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பப் படிவத்தினை நிகழ்நிலையில் (Online) மாத்திரம் சமர்ப்பிக்கலாம். நிகழ்நிலை வழியாக விண்ணப்ப படிவங்களை ஏற்றுக் கொள்வதானது, 2026, செத்தெம்பர் 14 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகி, 2026, ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

அலுவலர்கள் விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தமது தனியாள் கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டிய அதேவேளையில், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் சேவையை உறுதிப்படுத்தும் கடித்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிப்பதனை, இறுதித் திகதி வரையில் கால தாமதப் படுத்துவதனால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களையும் விண்ணப்பதாரர்களே ஏற்றல் வேண்டும்.

நிகழ்நிலை (Online) வழியான விண்ணப்பப் படிவங்களை ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். நிகழ்நிலை வழியில் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு என்பது குறித்து தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை (Instructions) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்கையில் இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாகப் பின்பற்றப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியில் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியற்றதாகும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் யாவும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

02. இப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் நிகழ்நிலை வழியாக ஏற்படுத்தப்பட்டுள்ள பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளில் ஏதேனுமொன்றின் கீழ் மாத்திரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணைய வழியில் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய ஏதேனுமொரு வங்கியின் செயலாக்கம் செய்யப்பட்ட பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை மூலம்/Flex செயலி மூலம் (Online Banking Method/ Flex App of Bank of Ceylon)

iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

(அ) மேற்குறித்த முறைமையொன்றின் கீழ் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற முறை தொடர்பிலான வழிகாட்டல்கள் இணையதளத்தில் பரீட்சைகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப் பெற்றதும் அது தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக் கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். கட்டணம் குறைவாகவோ அல்லது மிகையாகவோ செலுத்தப் பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக் கப்படும். மேற்குறித்த கட்டண முறையின் கீழ் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கவோ அல்லது வேறொரு பரீட்சைக்காகவோ மாற்றப்பட மாட்டாது.

04. இப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். எழுத்துப் பரீட்சைப் பாடத்திற்காக வழங்கப்படுகின்ற புள்ளிகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் என்பன பின்வருமாறு :

1. **ஆம் பிரிவு – எழுத்துப் பரீட்சை**

| | *மொத்தப் புள்ளி* | *கடவுப் புள்ளி* |
|---|---|---|
| விடய ஆய்வு (02 மணித்தியாலம்) | 100 | 50 |

2. **ஆம் பிரிவு - பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)**

பதவிக்கு ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளை பரீட்சார்த்திகள் பெற்றுள்ளனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து, உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளித் தகைமையின் இறங்கு வரிசைக்கு அமைய, பதவியில் வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டு, தகைமைகள் உறுதிப் படுத்தப்பட்டதன் பின்னர் ஆட்சேர்க்கப்படுவர்.

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் குறித்த பரீட்சைக்கு ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை சமர்ப்பித்ததன் பின்னர் விண்ணப்பதாரருக்கு பரீட்சையின் மொழியினை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தற்போதுள்ள சேவைக்கு உள்வாங்குவதற்காகத் தகுதிபெற்ற மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

05. இப் பரீட்சையில் விடய ஆய்வுப் பாடத்துக்காக பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்டம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

1. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற துறைமுகங்கள், ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்கள், விமான நிலையங்கள் மற்றும் ஏனைய சுங்க வளாக வாயில்களுக்குள் நுழையும் மற்றும் வெளிச்செல்லும் வாகனங்கள், நபர்கள், பயணிகள் மற்றும் பொதிகள் தொடர்பிலான பரிசோதனை,

2. சுங்க அலுவலகங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், ஏற்றுமதி செயன் முறைப்படுத்தல் வலயங்கள், ஏனைய சுங்க வளாகங்கள், சுங்கக் கிடங்குகள் மற்றும் பிணைக் குதங்களில் களஞ்சியப் படுத்துவதற்காக கொண்டு வரப்படுகின்ற, சுங்கத் தடைநீக்கத்தின் பின்னர் விடுவிக்கப்படுகின்ற பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல், வெளிக் கொண்டு செல்ல அனுமதித்தல் அவற்றுடன் தொடர்பான ஆவணங்களை ஆவணப்படுத்தல் மற்றும் குறித்த ஆவணங்களைப் பாதுகாத்தல்,

3. சாவிப் பொறுப்புக் கடமைகள்,

4. விசேட நடவடிக்கைகள், சுற்றிவளைப்புக்கள் மற்றும் கைதுசெய்தல்கள்,

5. சுங்கத்தில் தடுத்துவைக்கப்படுகின்ற, கைதுசெய்யப் படுகின்ற பறிமுதல்செய்யப்படுகின்ற பண்டங்கள், கொள்கலன்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஆவணங்கள்,

6. தீர்வைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய சுங்கக் கட்டணங்கள் செலுத்தப்படாத பண்டங்களை சுங்கத் திணைக்களத்தின் சார்பில் தமது மேற்பார்வையின் கீழ் எடுத்துச் சென்று ஒப்படைத்தல்,

போன்ற மேலே குறிப்பிட்டுள்ள கடமைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, சுங்கப் பரிசோதனைக் கடமைகளுடன் தொடர்புபற்ற நடைமுறைகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுகின்ற விடய ஆய்வுகளை (Case Studies) உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சை ஒன்றின் மூலம் விடய அறிவு பரீட்சிக்கப்படும்.

06. 6.1 விடய ஆய்வு என்ற பாடத்திற்கு ஆகக் குறைந்தது 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து, மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் குறித்த ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவதோடு, ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களில் 10% இற்கு மேற்படாத வெற்றிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கும் ஒதுக்கப்படும்.

6.2 பெறுபேறுகளை வெளியிடுதல்

மேலே 6.1 ஆம் பந்திக்கு அமைய தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்களின் பெயர்கள் அடங்கிய பெறுபேறுப் பட்டியல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்படும். சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைத்த பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

6.3 வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள நபர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் நிகழ்நிலையில் மாத்திரம் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது குறித்து இணையத்தள அறிவித்தலொன்றின் மூலம்/விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இருப்பின், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, என்பனவற்றை சரியாகக் குறிப்பிடப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிட்டப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைத் திணைக்களத்தினால் வேண்டப்பட்ட தகவலொன்றினை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதியையும் தம் வசம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதி அட்டைகளை பரிசீலனை செய்து, ஏதேனும் திருத்தங்கள் இருக்குமாயின் நேர காலத்துடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

6.4 பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்தில் அவர்களுக்கென குறித்தொதுக்கப்பட்ட சுட்டிலக்கத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளும் முதல் நாளிலேயே அவர்கள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையை கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டையை கையளிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

07. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தமது சுய ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும்.

(i) தேசிய அடையாள அட்டை;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;

(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, விண்ணப்பதாரர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத்தக்க வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்து இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தத்தக்க வகையில் இரு காதுகளையும் மறைக்காதவண்ணம் பரீட்சை நிலையத்தினுள் நுழைய வேண்டும். தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து நிலையத்தை விட்டு வெளிசெல்லும் வரையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்து இருத்தல் வேண்டும்.

08. 8.1 விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்காக அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றாக கருதுதல் ஆகாது.

8.2 இப் பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

09. பரீட்சையினை நடத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறுகின்ற பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு ஆளாக நேரிடலாம். பரீட்சைப் பெறுபேறு சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளிக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மைகள் இருப்பின், சிங்கள மொழியில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலே மேலோங்கிக் காணப்படுதல் வேண்டும் என்பதுடன், இங்கு குறிப்பிடப்படாத வேரேதும் விடயங்கள் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் தீர்மானத்தினை மேற்கொள்வார்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
“சுங்க இல்லம்”,
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

09-99/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.